**தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை - 2019**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் 2019 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரித்துகள் மாற்றமடைதலின் கூற்று மற்றும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக் கூற்றுகளுக்கு ஏற்புடையதான குறிப்புகள் மற்றும் சாராம்சப்படுத்திய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றைக் கொண்டமைந்துள்ள 2019 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 154(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் மற்றும் 1971 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வுச் செய்யப்பட்டது. பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கவேண்டுமென கருதுகின்ற எனது கருத்துக்கள் மற்றும் அவதானிப்புகள் இவ்வறிக்கையில் குறிப்பிடப்படுகின்றது.

இவ்வறிக்கையில் 1.5 பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களால் ஏற்படும் தாக்கங்களை தவிர்ந்த, அதிகார சபையின் 2019 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆந் திகதியில் நிதிசார் நிலைமையினையும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான அதன் நிதி செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையில் 1.5 பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின்படி அடிப்படையாகக் எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயம் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை கணக்காய்வு தரநியமம்படி (இ.க.த.நி) பிரகாரம் என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த கணக்காய்வு தரநியமம்படி எனது பொறுப்பு, இவ்வறிக்கையில் நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை வழங்கும் பொருட்டு என்னால் பெற்றுக்கொண்டுள்ள கணக்காய்வு சாட்சிகள் போதுமானதும் பொருத்தமானதெனவும் நம்புகின்றேன்.

## 1.3. நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கல்வி நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4. நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக அதிகார சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு அதிகார சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகார சபையில் உள்ள ஆற்றல் தொடர்பில்

குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அதிகார சபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயன்ற வரை தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரிசோதனை செய்வதற்கு கணக்காய்வு விடயவெல்லையும் விரிவாக்கப்பட்டுள்ளது.

- தகவல் சமர்ப்பித்தல் தொடர்பானவிடத்து அதிகார சபையின் கடமைகள் தொடர்ச்சியாக மதிப்பீட்டுக்கு உட்படும் வகையில் அதன் ஒழுங்கமைதல், முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் முறையாகவும் போதுமான அளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும், குறித்த முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் பயனுள்ளவாறு பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- ஏதேனும் எழுத்தினாலான சட்டத்திற்கு அல்லது அதிகார சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகி நிறுவனம் செயற்பட்டுள்ளது எனவும்.

- தமது தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்கியொழுகி செயலாற்றப்பட்டுள்ளது எனவும்,

- வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டுள்ளது எனவும்,

## 1.5 நிதிக் கூற்றுகள்

---------------------

### 1.5.1 நிதிக் கூற்றுகள் தயாரித்தல் தொடர்பான உள்ளக கட்டுப்பாடு

-----------------------------------------------------------------------

கொடுக்கல்வாங்கல் முகாமைத்துவத்தில் பொதுவான மற்றும் உறுதியான அதிகாரத்துடன் செயற்படல், உரியதான அறிக்கையிடல்களை நியமங்களுக்கு ஒழுங்கமைவாக தயாரிப்பதற்கு தேவையானவாறு கொடுக்கல்வாங்கல்களை பதிவு செய்தல், சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை பேணிச் செல்லுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் உரிய அதிகாரத்துவத்துடன் மட்டும் சொத்துக்களை அணுகுதல், குறிப்பு வைக்கப்பட்ட சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை தற்போதுள்ள சொத்துக்களுடன் நியாயமான காலப் பகுதிக்குள் ஒப்பிடுதல், வேறுபாடுகள் இருப்பின் அவை தொடர்பாக உரியவாறு நடவடிக்கை எடுத்தல் என்பவற்றுக்கு நியாயமான உறுதியினை பெற்றுக்கொள்வதற்கு போதியளவிலான ''சிறப்பாக திட்டமிடப்பட்ட'' உள்ளக

கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையை அதிகார சபையில் பேணிச்செல்லுதல் அத்தியாவசியமாகும்.

### 1.5.2 இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு தரநியமங்களுக்கு ஒழுங்கமையாமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சம்பந்தப்பட்ட தொடருடன் ஒழுங்கமையாமை | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு தரநியம இலக்கம் 01 இல் 48 ஆவது பந்தி பிரகாரம் தேவையானவிடத்து அல்லது அனுமதி வழங்கியுள்ளவிடத்து தவிர்ந்த, சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் என்பன பதிலீடு செய்தலாகாது என்பதுடன், கணக்கீட்டு முறையில் ஏற்பட்ட குறைப்பாடு காரணமாக நீண்டகாலம் காணப்பட்ட மூன்று கருத்திட்ட நிதியங்களின் மொத்தம் ரூபா.602,509 ஆன பற்று மீதியும், ஆறு நிதியங்களின் மொத்தம்ரூபா.3,322,669 தொகையிலான வரவு மீதியை சீராக்காது ஒவ்வொன்றுடன் பதிலீடு செய்து ரூபா.2,720,160 ஆன தேறிய பற்று மீதியை நிதி நிலைமைக் கூற்றுகளில் நடைமுறையல்லாத பொறுப்புகளின்கீழ் காட்டப்பட்டிருந்தது. | 2020 ஆண்டில் இறுதி கணக்குகளை தயாரிக்கையில் இந்த வரவு மற்றும் பற்று மீதிகளை வெவ்வேறாக நிதி நிலைமை கூற்றில் குறிப்பிடுமாறு உரிய அலுவலரிடம் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு தரநிமங்களுக்கமைவாக நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (ஆ) மீளாய்விற்கான ஆண்டுக்கு ஏற்புடையதாக செலுத்தப்பட வேண்டிய மொத்தம் ரூபா.1,502,528 ஆன பணிக்கொடை இலங்கை அரச துறை கணக்கீட்டு தரநியமங்கள் 01 தொடக்கம் 80 (ஈ) பந்தி பிரகாரம் நடைமுறை பொறுப்புகளாக காண்பிக்கப்பட வேண்டுமாயினும், நடைமுறையல்லாத பொறுப்புகளாக காண்பிக்கப்பட்டிருந்தது. | 2020 ஆம் ஆண்டில் இறுதி கணக்குகளை தயாரிக்கையில் மீளாய்விற்கான ஆண்டுக்கு ஏற்புடையதாக பணிக்கொடை ஒதுக்குதல் நடைமுறை பொறுப்பில் குறிப்பிடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளுமாறு உரிய அலுவலர்களிடம் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு தரநிமங்களுக்கமை-வாக நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (இ) இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு தரநியமம் 07 இல் 65 ஆவது பந்தி பிரகாரம் நடைமுறையல்லாத சொத்துக்களில் பயனுள்ள ஆயுட் காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யாமை காரணமாக செலவு ரூபா.11,192,030 ஆன நிலையான சொத்துக்களை முற்றுமுழுதாக தேய்மானம் செய்திருப்பினும், மேலும் பயன்படுத்தலில் இருந்தது. அதன்படி மதிப்பிடப்பட்ட குறைப்-பாடு இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு தரநியமம் 03 பிரகாரம் மீள்திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | 2020 ஆம் ஆண்டில் இறுதி கணக்குகளை தயாரிக்கையில் மோட்டார் வாகனங்களை மீள்கணிப்பீடு செய்து புத்தகங்களில் சீராக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு தரநிமங்களுக்கமைவாக நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டு குறைப்பாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின்அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) 2018 மற்றும் 2019 ஆண்டுகளில் அதி-கார சபையின் முன்பாக இருந்த பழைய எல்லை மதில்களுக்குப் பதிலாக புதிய எல்லை மதில்களை நிருமாணிப்பதற்கு செலவிடப்பட்டிருந்த ரூபா.3,635,654 ஆன செலவை மூலதனமயப்படுத்தலுக்குப் பதி-லாக வருவாய் செலவினமாக வருமான-த்தில் பதிவழிக்கப்பட்டிருந்ததுடன், இத-ற்கு மேலும் செலுத்தப்பட வேண்டியி-ருந்த ரூபா.1,741,535 ஆன தொகை பொறுப்புகளாக நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதே-போன்று எல்லை மதில்களின் பெறுமதி-களை அடையாளம் காணப்பட்டு புத்தக-ங்களில் அகற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. | 2020 ஆண்டில் பரிசோதனை செய்து செவ்வையாக்குவதற்கு அலுவலர்களிடம் ஆலோசனை வழங்கியதாகவும், மதிலின் நிருமாணிப்பு பணிகளுக்கு ஏற்புடையதான இறுதி கொடுப்பனவுகளை மேற்கொள்-வதற்கு பயன்படுத்திய ஒதுக்-கீடுகள் தொடர்பான பிரச்சினை உள்ளதால், அதற்கு ஏற்புடை-யதான அட்டுறு செலவி-னங்களை பதிவு செய்வதற்கு இயலவில்லை. | வருவாய் செல-வினம் மற்றும் மூலதன செல-வினம் என்பன செவ்வையாக அடையாளம் காணப்பட்டு கணக்கு வைக்க-ப்படுதல் வேண்டும். |
| (ஆ) மீளாய்விற்கான ஆண்டில் நிதி நிலைமை கூற்றில் நடைமுறை சொத்துக்களின்கீழ் இடர் கடனை மீள செலுத்தலாக ரூபா. 470,734 ஐ காண்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த பெறுமதி 05 ஆண்டுகளுக்கு அதிகமான காலப் பகுதி தொடக்கம் உள்ளதுடன், அந்த மீதிகளை உறுதிப்ப-டுத்திக் கொள்வறத்கு ஏற்புடையதான தகவல்களை கணக்காய்விடம் சமர்ப்பிக்கப்படவில்லை. | 2020 ஆம் ஆண்டில் இறுதி கணக்குகளை தயாரிக்கை-யில் செவ்வையாக்குதலை மேற்கொள்வதற்கு உரிய அலுவலர்களிடம் ஆலோ-சனை வழங்கப்பட்டுள்ளது. | சீராக்க வேண்டிய கணக்கு மீதிகளை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) நிதி ஓட்டக் கூற்றுகளை தயாரிக்கையில் நிலையான சொத்துக்களின் மீள்கணிப்பீடு பெறுமதியான ரூபா.1,230,959 ஐ முதலீடு செயற்பாடுகளின்கீழ் நிலையான சொத்து-க்களை கொள்வனவு செய்தல் என்று தவறாக காண்பிக்கப்பட்டிருந்ததுடன், தொழில்பாட்டு செயற்பாடுகளின்கீழ் நிதி-யல்லாத சீராக்கலின்கீழ் சீராக்கப்பட்டிருந்தது. | அபிப்பிராயம் தெரிவிக்கவில்லை. | காசுப் பாய்ச்சல் கூற்று செவ்வையாக தயாரித்தல் வேண்டும் |

## 1.6 கிடைக்கப்பெறுவனவைகளும் செலுத்தப்பட வேண்டியவைகளும்

### 1.6.1 கிடைக்கப்பெறுவனவைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| செயற்பாட்டு நிலைமையில் அல்லாத யுனிசெப் மற்றும் சேவ் த சில்ரன் ஆகிய நிதியங்களில் ஒழுங்குமுறையாக 2006 மற்றும் 2013 ஆகிய ஆண்டுகளில் கிடைக்கப்பெறுதலாக ரூபா.235,379 ம் மற்றும் ரூபா.256,510 ம் என்ற வகையில் நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப்பட்டிருப்பினும், அந்த மீதிகளை அறவிடல் நிச்சயமற்று காணப்பட்டது. | எதிர்வருங் காலத்தில் செவ்வையாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். | மீதிகளை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைபயன்

மீளாய்விற்கான ஆண்டில் தொழில்பாட்டு விளைபயன் ரூபா.2,900,087 ஆன மிகை காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்ததாக கடந்த ஆண்டின் பற்றாக்குறை ரூபா.7,438,888 ஆகும். இதன்படி நிதிசார் விளைபயன் ரூபா.10,338,974 ஆன வளர்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வளர்ச்சியுடன் நிருவாக செலவினம் ரூபா. 15,407,716 ஆன அதிகரிப்புடன் ஒப்பிடுகையில், மீண்டுவரும் திறைசேரி அளிப்புகள் ரூபா. 30,403,655 ஆல் அதிகரித்தல் பிரதான காரணமாக அமைந்துள்ளது.

## 3. தொழில்சார் மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) அதிகார சபையின் 1929 தொலைபேசி இலக்கத்திற்கு கிடைக்கப்பெறுகின்ற முறைப்பாடுகள் தொடர்பில் செயற்படு-வதற்கு பொருத்தமான பொறிமுறை தயாரித்தல் மற்றும் ஏற்புடைய முறைமை மேம்படுத்தல் என்பவற்றுக்கு பரிந்துரை பெற்றுக்கொள்வதற்காக ஆலோசகர்களிடம் 2016 / 2017 ஆண்டுகளில் ரூபா.900,000 செலுத்த-ப்பட்டிருந்தது. ஆயினும் அந்த அறிக்கை வழங்கப்பட்டு இரண்டு ஆண்டுகள் முடிவடைந்திருப்பினும், அதில் உள்ளடக்கப்பட்டுள்ள பரிந்து- | 1929 மென்பொருளுடன் பொருந்தாமை காரணமாக இந்த தரவு முறைமை மேலும் மேம்படுத்த வேண்டி ஏற்பட்டது. | முறைமைகளை செயற்படுத்து-வதற்கு பொருத்தமான பொறிமுறை தயாரிக்கப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| ரைகள் மற்றும் முறைமைகள் பின்பற்றுவதன்மீது முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்கவில்லை. | | |
| (ஆ) தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் பொலிஸ் பிரிவிடம் 2010 தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரை 48,361முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றிருந்ததுடன், அதில் 413 முறைப்பாடுகளின் புலனாய்வு முடிவுறுத்தப்பட்டு மேன்முறையீட்டு நீதிமன்றத்திடம் குற்றப்பத்திரம் தாக்கல் செய்வதற்காக சட்டமா அதிபரிடம் அனுப்பி வைக்கப்பட்டிருந்தன. அவ்வாறு சட்டமா அதிபரிடம் முன்வைக்கப்பட்ட கோவைகளில் 228 கோவைகள் தொடர்பில் மேன்முறையீட்டு நிதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்படவில்லை. | சிறுவர் தொடர்பில் வழக்கு தாக்கல் செய்தல் மற்றும் வழக்கு அலுவல்கள் என்பன துரிதப்படுத்தப்பட்டுள்ளதுடன், அதிகார சபையின் தலையீட்டுடன் அந்த வழக்கு அலுவல்களை தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுகிறது. எதிர்வரும் காலத்தில் இது தொடர்பாக கவனம் செலுத்தி வழக்கு தாக்கலை துரிதப்படுத்துவதன் பொருட்டு, தேவையான கூட்டிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. | வழக்கு தாக்கல் செய்தலை துரிதப்படுத்தல் வேண்டும். |
| (இ) 2009 சனவரி 06 ஆந் திகதி தொடக்கம் நடைபெற்ற 23 ஆவது பொது தொழில்முயற்சி செயற்குழுவில் அதிகார சபைக்கு தரவு பெற்றுக்கொள்ளும் சரியான முறைமையின் தேவை வலியுறுத்தப்பட்டதன் காரணமாக, 2014 ஆண்டு தொடக்கம் அதிகார சபையின் முறைப்பாடுகளுக்கு தீர்வு வழங்கும் தரவு முறைமை ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அந்த தரவு முறைமைக்காக மீண்டும் 2016 ஆம் ஆண்டில் கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணினி கல்விப் பிரிவுடன், ரூபா.1,200,000 இற்கு உடன்படிக்கை மேற்கொண்டிருப்பினும், கணக்காய்வு திகதியான 2020 யூன் 30 ஆந் திகதி வரை அந்த தரவு முறைமை முடிவுறுத்தப்படவில்லை. | இது தொடர்பாக கொழும்பு பல்கலைக்கழகத்துடன், கலந்துரையாடப்பட்டுள்ளதுடன், அதனை துரிதமாக தீர்க்கும்படி எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. | சட்டம் பிரகாரம் தேசிய தரவு அடிப்படை தயாரித்தல் மற்றும் அதனை பேணிச் செல்லுதல் மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (ஈ) முறைப்பாடுகளை தீர்க்கும் குறைப்பாடுகள் காரணமாக 2011 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரை அதிகார சபையில் பதிவு செய்யப்பட்டிருந்த 81,259 முறைப்பாடுகளில் மீளாய்விற்கான ஆண்டு இறுதியிலும் தீர்க்கப்படாது 41,142 முறைப்பாடுகள் முன்கொண்டு வரப்பட்டிருந்ததுடன், அது மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கையில் 50% ஆகும். | இந்த முறைப்பாடு கோவைகளை முடிவுறுத்துவதற்கு தற்போது துரிதமான வேலை திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | தீர்க்கப்படாது முன்னெடுத்துச் சென்றுள்ள முறைப்பாடுகளை துரிதமாக முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

## 3.2 மனிதவள முகாமைத்துவம்

-----------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) மீளாய்விற்கான ஆண்டு இறுதியில் அதிகார சபையில் அங்கீகரிக்கப்பட்ட பணியாற்தொகுதி 534 ஆகியதுடன், உண்மையான பணியாற்தொகுதி 348 ஆகியதால் 186 பதவிகள் வெற்றிடங்களாக உள்ன. | ஆட்சேர்ப்புச் செய்வதற்காக எதிர்கால நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன. | அதிகார சபையின் நோக்கங்களை நிறை-வேற்றிக்கொள்வதற்கு மனிதவள முகாமை-த்துவம் முறையாக மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (ஆ) அலுவலர்களை ஆட்சேர்பபுச் செய்யும் திட்டம் திருத்தம் செய்தல் மற்றும் சேவையில் ஈடுபட்டுள்ள அலுவலர்களை ஏற்புடைய பதவிக-ளில் நிறுத்தி வைப்பதற்காக சம்பளம் மீள்திருத்தம் செய்தல் என்பன நீண்ட காலமாக மேற்கொள்-ளாதபடியால் அதிகார சபையின் ஊழியர் ஆகுசெலவு அதிகரித்தலும் சமூக பொறுப்புகளை நிறைவேற்றும் தாமதமும் கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டது. | மாவட்ட மற்றும் பிரதேச அலுவலர்களது சம்பள படிநிலைகள் தொடர்பாக நிலவிய பிரச்சினை-களை தீர்ப்பதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்துடன், தேவையான கூட்டிணைப்புகளை மேற்கொண்டு தற்போது மாவட்ட சிறுவர் பாதுகாப்பு அலுவலர் மற்றும் மாவட்ட மனோ சமூக அலுவலர் ஆகிய இரண்டு பதவிகளுக்கு சம்பள படிநிலைகளை அதிகரிப்-பதற்கு பிரேரணை செய்யப்பட்-டுள்ளது. நிலுவையாக உள்ள சம்பளவேற்றங்களை துரிதமாக வழங்குதல், நிரந்தரமாக்குவதற்கு ஏற்புடையதான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் இடமாற்ற-ங்கள் தொடர்பாக தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் ஆகிய செயற்பாடுகள் முறைசார்ப-டுத்தப்பட்டுள்ளன. | மனிதவள முகாமைத்துவம் முறையாக மேற்கொள்ளுதல் வேண்டும். |

## 4. கணக்கீட்டு நெறிமுறை மற்றும் நல்லாட்சி

### 4.1 வருடாந்த செயற்றிட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) சிறுவர் துஷ்பிரயோகங்களால் பாதிப்புக்குள்ளாகிய சிறுவர்களுக்கு வசதிகளை வழங்குவதற்காக ரூபா.250,000 ம் வீடியோ சாட்சிகளை பதிவு செய்தலும் பராமரிப்பும் பொருட்டு ரூபா.1,500,000 ம் என்ற வகையில் ஒதுக்கீடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதில் ஒழுங்குமுறையாக ரூபா.51,000 ம் மற்றும் ரூபா.27,000 ம் மட்டும் செலவிடப்பட்டிருந்தது. | எதிர்வருங் காலத்தில் அங்கீகரிக்கப்பட்ட நிரந்தர பதவிகளின் பொருட்டு ஆட்சேர்ப்புகளை மேற்கொண்டதன் பின்னர் உரியவாறு ஒதுக்கீடுகளை பயன்படுத்தி கிடைக்கப்பெறும் கோரிக்கைகளுக்கமைவாக சாட்சிகளை பதிவு செய்தலை ஒழுங்கு முறையாக ஆகக்கூடிய மட்டத்தில் மேற்கொள்வதற்கு வாய்ப்பு கிடைக்கப்பெறும். | செயற்றிட்டத்தின்படி நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (ஆ) சிறுவர்களை எல்லா வகையிலுமான துஷ்பிரயோகங்களிலிருந்து பாதுகாத்துக்கொண்டு அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக வயோதிபர்களை அறிவுறுத்தல் மற்றும் அது தொடர்பாக சிவில் சமூகத்தை வலுப்படுத்தும் நோக்கத்தில், சிவில் சமூக செயற்பாடுகளை அடையாளம் காணும் நாடளாவிய நிகழ்ச்சியாக 2018 ஆம் ஆண்டு தொடக்கம் ஜனபவுர நிகழ்ச்சித்திட்டம் கிராமிய மட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. மீளாய்விற்கான ஆண்டில் அதற்காக ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடு ரூபா.6,577,000 ஆன தொகை அநுராதபுர மாவட்டத்தில் 22 பிரதேச செயலகப் பிரிவுகளில் அறிவுறுத்தும் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தல் மற்றும் கிராமிய சிவில் சமூகங்களை அடையாளம் காண்பதற்கு மட்டும் செலவிடப்பட்டிருந்தது. | ஜனபவுர நிகழச்சித்திட்டம் சனாதிபதி அலுவலகத்தில் சிறுவர்களை பாதுகாப்போம் என்ற நிகழ்ச்சித்திட்டதில் நிதிசார் ஒதுக்கீடுகளின்கீழ் நடைமுறைப்படுகின்ற நிகழ்சித்திட்டமாகும். 2019 திசெம்பர் 17 திகதி தொடக்கம் இந்த நிகழ்ச்சித்திட்டங்களை முன்னெடுத்து செல்வதில்லையென சனாதிபதி அலுவலகம்மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. நிகழ்ச்சித்திட்டம் முன்னெடுத்து செல்வதற்கு பிரச்சினையுடன்கூடிய நிலைமை ஏற்பட்டது. | செயற்றிட்டத்தின்படி நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (இ) தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு, சமூக பாதுகாப்பு கருத்திட்டத்தின்கீழ் சமூக பாதுகாப்பு செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக வழங்கியிருந்த ரூபா.8,075,000 ஆன ஒதுக்கீடுகளிலிருந்து ரூபா.1,975,000 ஐ இலங்கை சிறுவர் பராமரிப்பு நிலையங்கள் பற்றி, தேசிய வழிகாட்டல் கோவை தொடர்பாக அலுவலர்களை அறிவுறுத்தல் மற்றும் பயிற்றுவிப்பதற்காக 25 நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு ஒதுக்கப்பட்டிருந்தது. மீளாய்விற்கான ஆண்டில் ரூபா.478,000 தொகை செலவிடப்பட்டு 7 மாவட்ட- | சிறுவர் பராமரிப்பு நிலையங்களுக்கான தேசிய வழிகாட்டல் கோவை 2019 ஆம் அண்டில் அச்சிடப்பட்டு முடிவுறுத்தப்பட்டுள்ளது. ஆகையால், இந்த பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் இவ்வழிகாட்டலை அச்சிடபட்டதன் பின்னர் ஆரம்பிக்கப்பட்டமையும் நவம்பர் மாதத்தில் சனாதிபதி தேர்தல் நடாத்தியமை காரணமாக கூட்டங்களை நடாத்த முடியாமையும் இதற்கு காணரங்களாகியுள்ளன. | செயற்றிட்டத்தின்படி நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| ங்களில் 415 அலுவலர்களின் பொருட்டு 7 நிகழ்ச்சித்திட்டங்களை மட்டும் நடாத்தப்பட்டிருந்தது. மீளாய்விற்கான ஆண்டு இறுதியில் சமூக பாதுகாப்பு செயற்றிட்டம் நடைமுறைப்படுத்துவதற்கு மொத்த ஒதுக்கீடுகளிலிருந்து ரூபா.4,805,000 அதாவது 59% ஐ மட்டும் செலவிடப்பட்டிருந்தது. | | |
| (ஈ) 24 மணித்தியாலங்கள் இலவசமாக சிறுவர் தொலைபேசி சேவை தொடர்பான செயற்றிட்டம் நடைமுறைப்படுத்துவதற்காக ரூபா.4,250,000 ஆன ஒதுக்கீடு வழங்கப்பட்டிருந்ததுடன், அதில் ரூபா.2,900,000 தொகையில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகளில், சர்வர் அறை நிருமாணித்தல், அலுவலர்களுக்கான ராக்கை தயாரிப்பு, மற்றும் 1929 அழைப்பு நிலையத்திற்கு கதிரைகளை கொள்வனவு செய்தல் ஆகிய பணிகள் மேற்கொண்டிருக்கவில்லை. | 2019 ஆண்டில் திறைசேரி ஒதுக்கீடு வழங்குதல் தாமதமாதல் மற்றும் அனுமதி வழங்குகையில் ஏற்பட்ட பிரச்சினைகளுடன்கூடிய நிலைமை காரணமாக இந்த செயற்றிட்டத்தின்கீழ் திட்டமிடப்பட்ட அலுவல்கள் தாமதமடைந்துள்ளன. | செயற்றிட்டத்தின்படி நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

## 4.2 உள்ளக கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| 2009 யூன் 09 ஆந் திகதிய முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கை இலக்கம் டீஎம்ஏ/2009 /(1) இல் 3 பந்திக்கு ஏற்புடையதாக உரிய பணிகளை நிறைவேற்றுவதற்காக போதியளவு பணியாற்தொகுதியினரை உள்ளக கணக்காய்வுப் பிரிவிடம் இணைக்கப்படவில்லை. | அதிகார சபையில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு சிரமம் காரணமாக தற்போது உள்ள பணியாற்தொகுதியின் அலுவலரொருவரை உள்ளக கணக்காய்வுப் பிரிவிடம் இணைப்பதற்கு சிரமமாக உள்ளது. | போதியளவிலான பணியாற்தொகுதியினரை இணைக்கப்படுதல் வேண்டும். |

## 4.3 வரவு செலவு கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்விற்கான ஆண்டு இறுதியில் மேற்கொண்ட செலவினங்களை அடிப்படையாகக்கொண்டு 2020 ஆகஸ்ட் மாதம் 08 ஆந் திகதி வரவு செலவு மதிப்பீடு திருத்தம் செய்யப்பட்டிருந்தது. | அபிப்பிராயம் தெரிவிக்கப்படவில்லை. | வரவு செலவு மதிப்பீடு பயனுள்ள நிதிக் கட்டுப்பாட்டு முறை-யாக பயன்படுத்தல் வேண்டும். |